ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2113/62 - 2019 මාර්තු මස 08 වැනි සිකුරාදා - 2019.03.08

*2113/62 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி 21/78* (xv).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஏ. இபதுல் றவூப் ஹக்கீம் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மேல், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றாகக் கருதப்படுகின்ற இலங்கை, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதான, (2017, யூன் 30 ஆந் திகதிய 2025/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) 2006, யூன் 09 ஆந் திகதிய 1448/ 27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் நிரல் I இல் காணப்படுகின்ற “மருத்துவ பீடம்” என்னும் விடயத்துக்கு நேரொத்ததாகவுள்ள அட்டவணையின் நிரல் II இல் காணப்படுகின்ற “17. இணைந்த சுகாதார அறிவியல்கள் துறை” என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் பதிவைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

“18. குடும்ப மருத்துவத் துறை.”.

ஏ. இபதுல் றவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும்
உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2019, மாச்சு 06.

03-1053